# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16109/SCIC/2025**

திரு வே. பிச்சுமணி ................................................ மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
‘F’ பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 600 028

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 01.08.2025 |
| 2. | மனுதாரரின் மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் | 08.08.2025 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 20.09.2025 |
| 4. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 12.09.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.11.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 01.08.2025 தேதியிட்டு அனுப்பிய மனுவில், கேப்டன் சசிச்குமார் நகர் நலச்சங்கம் குறித்து 10.05.2025 தேதியிட்டு அளித்த மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு லிபின், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், (இரண்டாம் நிலை), பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் 01.08.2025 தேதியிட்ட தனது சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவினை பதிவுத்துறைத்தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான பதிவுத்துறைத்தலைவர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 01.08.2025 தேதியிட்ட மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 08.08.2025 தேதியிட்டு மாவட்ட பதிவாளர், தாம்பரம் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், பின்னர் படப்பை சார்பதிவாளரால் 20.09.2025 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். 20.09.2025 தேதியிட்ட தகவல்கள் சரியானதாகவும், திருப்திகரமாகவும் அமையவில்லையென்பது ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. **எனவே, இவ்வழக்கின் விசாரணையானது வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. வழக்கின் மறுவிசாரணை குறித்து, மனுதாரர், இன்றைய விசாரணைக்கு ஆஜரான பதிவுத்துறைத்தலைவர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தாம்பரம் மாவட்ட பதிவாளர் ஆகியோர்களுக்கு விசாரணை அழைப்பாணைகள் ஆணையத்திலிருந்து அனுப்பப்படவேண்டும்.**

4. **மனுதாரர் கேப்டன் சசிக்குமார் நலச்சங்கம் குறித்து 10.05.2025 தேதியிட்டு பதிவுத்துறைத் தலைவருக்கு அளித்த மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினைக் கோரியுள்ளார். ஆணையத்தின் அடுத்த விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட பொதுத் தகவல் அலுவலர்கள் இருவரும் மனுதாரரின் மனுவின் தற்போதைய நிலை குறித்த தகவல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16109/SCIC/2025</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர் /
‘F’ பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 600 028

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
தாம்பரம், சென்னை.

**மனுதாரர்**
திரு வே. பிச்சுமணி,
66 ஏ கேப்டன் சசிகுமார் நகர் நலச் சங்கம்,
புதுப்பெருங்களத்தூர் அஞ்சல்,
**சென்னை** 600 053

TK/PS